EMPLOYMENT ONTARIO
Ontario's employment & training network

Ontario

<u>ஆன்டாரியோ திறமைகள் அபிவிருத்தி</u>

ஆன்டாரியோ திறமைகள் அபிவிருத்தித் (Ontario Skills Development Program) திட்டம், வேலை காப்புறுதி (Employment Insurance) பெறத் தகுதி பெற்ற அல்லது சமீபத்தில் தகுதி பெற்ற மற்றும் தொழில் சந்தையில் மீண்டும் நுழையும் பொருட்டு விற்பனை செய்யக்கூடிய திறமைகள் தேவைப்படும் வேலையிலில்லாத மக்களுக்கு உதவி வழங்குகிறது.

இந்தத் திட்டம் தொழில் சந்தையில் மீண்டும் நுழைவதற்குத் தேவையான பயிற்ச்சியைப் பெறவதற்குத் சம்பத்தப்படும், பயிற்ச்சிக் கட்டணம் மற்றும் புத்தகங்கள் போன்ற, சில செலவுகளுக்கு உதவ நிதி உதவி வழங்குகிறது.

**யார் விண்ணப்பிக்கலாம்?**

வேலையில்லாமல் வேலை தேடுபவர்கள் கீழ் கண்ட நிபந்தனைகளில் **ஒன்றைப்** பெற்றிருந்தால் இதில் பங்கு பெற விண்ணப்பிக்கலாம்:

- வேலைக் காப்புறுதி உபகாரங்களுக்கு (Employment Insurance benefits) உரிமையை நிர்மாணித்தவர்கள் அல்லது அவர்களது வேலைக் காப்புறுதி உபகாரக் காலம் கடந்த மூன்று ஆண்டுகளுக்குள் முடிந்தவர்கள்.
- பேறுகால அல்லது பெற்றோருக்கான வேலைக் காப்புறுதி உபகாரங்களுக்கு (Employment Insurance maternity or parental benefits) உரிமையை நிர்மாணித்தவர்கள் மற்றும் கடந்த ஐந்து

ஆண்டுகளுக்குள் இந்த உபகாரங்கள் வழங்கப்பட்டவர்கள், மற்றும் புதிதாய் பிறந்த குழந்தை அல்லது புதிதாய் தத்தெடுக்கப்பட்ட குழந்தைகளைப் பேணச் சென்றுவிட்டு மீண்டும் வேலை நடைமுறைக்குள் நுழைபவர்கள்.

ஒருவர் இதில் கலந்து கொள்பவராய் தகுதி பெற்றவரா என்பதைத் தீர்மானிக்கும் பொருட்டு, பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்களை *Employment Ontario* பெறும் நாள், அவரோ அல்லது அவளோ உதவி வேண்டிய நாளாகக் கருதப்படும்.

வேறு சில அளவைகளும் உபயோகிக்கப்படலாம்.

### மேலும் தகவலை நான் எப்படிப் பெறலாம்?

உங்கள் பகுதியில் உள்ள ஆன்டாரியோ திறமைகள் அபிவிருத்திச் சேவைகளை எப்படிப் பெறலாம் என்பதை மேலும் அறியக் கட்டணமற்ற *Employment Ontario* நேரடித் தொடர்பை 1-800-387-5656 என்ற எண்ணிலோ, அல்லது டொரான்டோவில் (416) 326-5656 என்ற எண்ணிலோ அழையுங்கள்.

மாற்றாக, ஆன்டாரியோ திறமைகள் அபிவிருத்தித் திட்டம் பற்றி உங்கள் பகுதி ஆன்டாரியோ வேலைவாய்ப்பு உதவிச் சேவைகள் (Ontario Employment Assistance Services) அலுவலகத்தைத் தொடர்பு கொள்வதன் மூலம் மேலும் அறியுங்கள். ஒரு குறிப்பிட்ட சமூகத்தில் உள்ள ஆன்டாரியோ வேலைவாய்ப்பு உதவிச் சேவைகள் அலுவலகத்தின் தொலைபேசி எண் மற்றும் இருப்பிடத்தை www.edu.gov.on.ca/eng/tcu/search.html என்ற வலைப்பக்கத்தை அடைந்தும் நீங்கள் தேடலாம்.